கூடுதல்   மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்      **54/2025**

வாதி தரப்பு சாட்சி –1 பாலசுப்பிரமணி   திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 04.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.1 – பாலசுப்பிரமணி – முதல் விசாரணை  தொடர்ச்சி</u>**

1. 11.05.2023 ம் தேதியிட்ட எனது தந்தையின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.10**
2. 21.07.2021 ம் தேதியிட்ட எனது தாயாரின் இறப்பு சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.11**

**<u>2 மற்றும் 3 ம்  பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும்.  பழனிச்சாமி என்பவர் யார் என்றால்  எனது தந்தை ஆவார்.  எனது தாயார் பெயர் என்ன என்றால் மீனாட்சி ஆகும். பழனிச்சாமிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் சுமார் 70 முதல் 80 வருடங்களுக்கு முன்பு இருக்கும்.  பழனிச்சாமி மற்றும் மீனாட்சிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 குழந்தைகள்.  அவர்கள் முறையே ராஜலிங்கம், சிறும்பாயி மற்றும் பாலசுப்பிரமணி.  மேற்படி எனது தாயார் மீனாட்சி எப்போது இறந்தார் என்றால் சுமார் 5 வருடங்கள் முன்பு இறந்தார்.

2. எனது பள்ளி மாற்று சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நெருப்பில் எறிந்து விட்டதால் தாக்கல் செய்யவில்லை.  எனது பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.  எனது குடும்ப அட்டையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.  எனது குடும்ப அட்டையில் யார் யார் வாரிசுகளாக காண்பிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் வாதிகள் 6 நபர்கள் பெயரும் உள்ளது.  மேற்படி குடும்ப அட்டையை என்னால் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.  சாட்சி மீண்டும் மேற்படி அனைவரின் பெயரும் உள்ள குடும்ப அட்டை சுமார் 30 வருடங்களுக்கு முன்பு பெறப்பட்டது என்றும், தற்போது உள்ள குடும்ப அட்டை தனித்தனியாக உள்ளது என்றும் கூறுகிறார்.

3. எனது தாயார் மீனாட்சி உயிருடன் இருந்த போது எனது தந்தை பச்சையம்மாளை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான்.  எனது தந்தைக்கு முதல் மனைவி இருக்கும் போது  2 வதாக பச்சையம்மாளை

திருமணம் செய்ததால் பச்சையம்மாள் எனது தந்தையின் சட்டப்படியான மனைவி இல்லை என்றால் சரிதான். பழனிச்சாமியின் பெற்றோர்கள் உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. பழனிச்சாமியின் தந்தை பெயர் என்ன என்றால் காளியப்பன். தாயார் பெயர் அரியம்மாள் ஆகும். பழனிச்சாமிக்கும் பச்சையம்மாளுக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் 3 குழந்தைகள்.

4. அவர்கள் முறையே இரத்தினவேல், முனியப்பன், தமிழரசி ஆகியோர்கள். மேற்படி நபர்கள் பழனிச்சாமி மற்றும் பச்சையம்மாளுக்கு பிறந்தவர்கள் என்பதை காண்பிக்க அவரது பிறப்பு மற்றும் பள்ளி மாற்று சான்றிதழ்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எனது தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் 2023 ல் இறந்தார். ஏன் அப்போதே வாரிசு சான்றிதழ் கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் அப்போது அவசியம் ஏற்படவில்லை. எனது தந்தைக்கு வேறு பெண் வாரிசுகள் உள்ளனரா என்றால் இல்லை. வருவாய்துறையில் முறையான ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் எனது மனுவினை நிராகரித்துவிட்டனர் என்றால் சரிதான். எனவே, நான் மேல்முறையீடு செய்யாமல் நீதிமன்றத்திற்கு வந்தது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**